பக்கங்கள்:-18

# காலை முரசு

## பருத்தித்துறையில் 14 பேர் நேற்று கைது



(எஸ்.ரகுதீஸ்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 10 | வியாழக்கிழமை | 23.01.2025 | அதிர்வு 174



### நிதி மோசடிக் குற்றச்சாட்டில்

# முன்னாள் அமைச்சர் அநுர யாப்பா கைது!

### அவரது மனைவி உட்பட மேலும் அறுவர் சிக்கினர்

முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா நேற்று புதன்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் 07

# கலாசார நிலைய பெயர் மாற்றம் தமிழினத்தை அவமதித்த செயல்

## இலங்கைத் தமிழரசுக் கட்சி கடும் காட்டம் இந்தியத் துணைத் தூதுவருக்குக் கடிதம்



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

"இலங்கைத் தமிழினத்தின் பெருமைக்கும் இறுமாப்புக்கும் உடையதான 'யாழ்ப்பாணம்' என்ற பெயரை யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலைய விடயத்தில் அகற்றியமை எம்மை அவமதித்தமைக்குச் சமமாகும். 05



# ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மீட்க எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?



## சபையில் அரசிடம் சிறீதரன் எம்.பி. கேள்வி

குடும்பப் பொருளாதார மேம்பாட்டுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல முற்பட்டு முகவர்களால் ஏமாற்றப்பட்டு, ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமான முறையில் இணைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு அரசு இராஜதந்திர மட்டத்தில் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் என்னவென்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பினார். 06

# மஹிந்தவுக்கு மக்கள் பாதுகாப்பு வழங்குவார்களாம்


## இப்படிக் கூறுகின்றார் அவரின் நெருங்கிய சகா ஜோன்ஸ்டன்

"மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்படவில்லை. அவரே என்றைக்கும் நாட்டு மக்களின் தலைவராக இருக்கின்றார். அவரை மக்கள் பாதுகாப்பார்கள்."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"போரை முடிவுக்குக் கொண்டு வந்து இலங்கை மக்களுக்கும் நாட்டுக்கும் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தவரே மஹிந்த ராஜபக்ஷ. அவரே என்றைக்கும் நாட்டு 06






ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தமக்குக் கிடைத்த வெற்றியின் வீச்சு குறைவதற்கிடையில் – அரசுக்கு எதிரான எதிர்ப்புணர்வு வளர்வதற்கு முன்னர் – அவசர அவசரமாக உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தி முடித்து விட அரசுத் தலைமை விரும்புகிறது.

அதனால்தான் தமிழ் – சிங்கப் புது வருடத்துக்கு முன்னர் தேர்தல் என்று அறிவித்து காய் நகர்த்த முற்பட்டது அரசு.

ஆயினும், அந்தக் காலக்கெடு உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிக்க போதுமானதாக இல்லை என்பதை ஓரிரு வாரங்களுக்கு முன்னரே சுட்டிக்காட்டி இருந்தேன்.

புது வருடத்துக்கு முன்னர் தேர்தலை நடத்தலாம் என்று அரசுத் தலைமை விடாப்பிடியாக இருந்தாலும் அது சாத்தியமா என்பது இன்னும் உறுதியாகவில்லை.

ஏற்கனவே 2023இல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை 05

# கிளீன் ஸ்ரீலங்காவுக்கு ஜூலி சங் பாராட்டு



நாட்டின் சுகாதாரம் மற்றும் ஊடகத் துறைகளை முன்னேற்றுவதற்கு நிதி, தொழில்நுட்பம், அறிவு மற்றும் பௌதீக ஆதரவைத் தொடர்ந்தும் வழங்கத் தயார் என அமெரிக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதாரம் மற்றும் ஊடகத் துறைகளின் எதிர்கால வளர்ச்சிக்கு அமெரிக்க அரசாங்கம் வழங்கும் ஆதரவு மற்றும் மானியங்கள் குறித்தும் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் தற்போதைய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய திட்டத்திற்கு அமெரிக்கத் தூதுவர் பாராட்டைத் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வட்டுவாகல் பாலத்திற்கான நிதி ஒதுக்கீடு உறுதியானது

## ரவிகரன் எம்.பி. தகவல்





(பா.சதீசன்)

முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலம் அமைப்பதற்கு 2025ஆம் ஆண்டிற்குரிய வரவு - செலவுத்திட்டத்தில் நிதிஒதுக்கீடுசெய்யப்படுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடிய போதே அமைச்சர் விமல் ரத்நாயக்க இவ்விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தமது தொடர் முயற்சிக்கு பலன் கிடைத்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாகவும், ஜனாதிபதிக்கும், அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிற்கும், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவிற்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.





# தரமான கல்வி அணுகலை மேம்படுத்துவது குறித்து பிரதமருடன் உலக வங்கி அதிகாரி பேச்சுவார்த்தை

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் உலக வங்கியின் தெற்காசிய வலயத்திற்கான உப தலைவர் மார்டின் ரெய்சருக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

கல்வி, பாலின சமத்துவம் மற்றும் பிராந்திய விடயங்கள், நிலையான முன்னேற்றத்தை ஏற்படுத்தல் மற்றும் தேசிய சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான தேவைகள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டதாகப் பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி மற்றும் பயிற்சி ஊடாக தரமான கல்வி அணுகலை மேம்படுத்துவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கு கொள்கை ரீதியிலான தலையீடு மற்றும் ஒத்துழைப்பு கட்டமைப்புகளின் தேவை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

கல்வி, பாலின சமத்துவம் மற்றும் பிராந்திய அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான நிலையான தீர்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில் இலங்கை மற்றும் உலக வங்கியின் பரஸ்பர உறுதிப்பாடு குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.















# முல்லைத்தீவின் பல பகுதிகளில் விவசாய நிலங்கள் அழிவடைந்தன

(பா.சதீசன்)

முல்லைத்தீவின் கொக்குதொடுவாய், கொக்குளாய், கர்நாட்டுக்கேணி மக்கள் விவசாய அறுவடை செய்யப்பட்ட நெல்லும், அறுவடை செய்ய தயார் நிலையில் இருந்த நிலங்களும் அழிவடைந்துள்ளன எனவும் அதற்கு அரச அதிகாரிகளின் பொறுப்பற்ற செயலே காரணம் என்றும் விவசாயிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற் குட்பட்ட கொக்குதொடுவாய், கொக்குளாய், கர்நாட்டுக்கேணி மக்கள் விவசாயம் செய்யும் அக்கரைவெளி, எரிஞ்சகாடு, சுகந்தாமுறிப்பு, கன்னாட்டி ஆகிய இடங்களுக்கு செல்லும் வீதி தண்ணீர் தேங்கி நிற்கின்றது. இதனால் குறித்த பகுதி யில் உள்ள விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளன.

கடந்த 2012 ஆம் ஆண்டிற்கு பின்னர் மேற்படி பகுதி வீதி புனரமைக்கப்படவில்லை. இதனால் மழைகாலங்க ளில் விவசாயம் செய்து அறுவடை செய்த நெல்லை வீட் டிற்கு கொண்டு செல்லமுடியாது அந்தப் பகுதி விவசாயிகள் சிரமத்திற்கு உள்ளாகி வந்துள்ளார்கள்.

இந்நிலையில் இவ் வருடம் இறுதியாக நடந்த கரை துறைப்பற்று பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டத்தில் மேற்படி பாதையினை மதிப்பீடு செய்து 100 மீற்றர் தூரம் தற்காலிக புனரமைப்பு செய்து தரும்படி கோரியிருந்தும், புனரமைப்பு செய்து கொடுக்கப்படவில்லை. இதனால் 4700 பை அறுவடை செய்த நெல்லும், 2700 ஏக்கர் பயிர்நிலமும் அழிவடைந்துள்ளன.

இந்த சம்பவம் குறித்து விவசாயி ஒருவர் கூறும் போது, “2012 இல் இருந்து விவசாயம் செய்து வருகின்றோம். அன்று தொடங்கி இன்றி வரை வீதி புனரமைப்பு செய்யப்படவில்லை. நாம் விவசாயம் செய்து அறுவடை செய்த நெல்லை கடல்மார்க்கமாகவும் , பல வாகனங்கள் ஊடகவும் தான் சிறிது சிறிதாக கொண்டு போகின்றோம். ஆனால் இவ்வாறு செய்வதனால் விவசாயிகளுக்கு எந்த இலாபமும் கிடைப்பதில்லை. இதனால் கடந்த கரைதுறைப் பற்று பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் குறித்த பாதையில் 100 மீற்றர் தூரம் தற்காலிக புணரமைப்பு செய்து தரும்படி கோரியிருந்நதாம். தற்காலிகமாக வீதியினை புணரமைத்து தந்தால் மட்டுமே நெல்லை கொண்டுவரலாம். அவ்வாறு செய்யாவிடில் அவ்வளவு நெல்லும் அழிவடையும் என கூறியிருந்தோம்.

ஆனால், இதுவரை மேற்படி பாதை புணரமைக்கப் படவில்லை. தற்போது அரச அதிகாரிகளின் அசண்டை யினத்தால் மழைவெள்ளம் ஒருபுறம் இருக்க அறுவடை செய்த நெல்லை வீட்டுக்கு கொண்டு செல்லமுடியாத நிலை இருக்கின்றது. அத்தோடு அறுவடை செய்த நெல்லினை யானை இரவு வேளைகளில் சாப்பிடுவதும், மழைநீரில் அடித்து செல்லப்படுவதும் என பல நெருக்கடிகளுக்கு ஆளாகி இருக்கின்றோம். அறுவடை செய்த நெல்லில் 100 பைகள் இதுவரை யானையால் கிழித்தெறியப்பட்டுள்ளது.

இந்த பொருளாதார நெருக்கடி காலத்தில் எவ்வளவு வறுமைக்குள்ளும் நெல் விதைத்து, மருந்து, உரங்கள் போட்டு, நோயிலிருந்து, யானையில் இருந்து பாதுகாத்து அறுவடை செய்து கடைசியாக சாப்பாட்டுக்கே நெல் இன்றி தவிக்கும் அவல நிலைக்கு வந்துள்ளோம். இவ்வாறான விபரிதம் ஏற்படும் என அன்று அரச அதிகாரிகளுக்கு கூறியிருந்தும் அரச அதிகாரிகளின் அசண்டையீனத்தி னால் எல்லாவற்றையும் இழந்துள்ளோம்.” என்றார்.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முழுமையாக ரத்து செய்து, புதிதாக வேட்பு மனுக்களை ஏற்று, தேர்தலை ஆரம்பத்திலிருந்து நடத்த வேண்டும் என்பது பெரும்பாலான தரப்புகளின் விருப்பம். அதன்படி செய்வதே உசித மானது என்று தற்போதைய அரசும் தீர் மானித்து அதற்கான காய் நகர்த்தல் களை முன்னெடுத்து வந்தது.

ஆயினும், முன்னைய வேட்பு மனுக் களை ரத்து செய்ய வழி செய்யும் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கான ஏற்பாடு களைச் செய்வதில் அரசு தரப்பு ஆரம்பத் தில் காட்டிய தாமதம் தமிழ் – சிங்களப் புது வருடத்திற்கு முன்னர் தேர்தலை நடத்தி முடிப்பதைக் கேள்விக்குள் ளாக்கி இருப்பதாகத் தெரிகிறது.

இதற்கான சட்டமூலம் வர்த்தமானி யில் பிரசுரிக்கப்பட்ட போதிலும் அதற்கு எதிராக ஆட்சேபனை தெரிவித்து உயர்நீதி மன்றத்தில் இப்போது மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

'உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூலம்' என்று குறிப்பிடப்படும் இதன் சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானவை என்று தீர்ப்பளிக்கக் கோரி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனா திபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் தாக்கல் தாக்கல் செய்துள்ள மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்பட்ட பின்னர் மனுதாரர்கள் தங்கள் சமர்ப்ப ணங்களை சமர்ப்பிப்பதற்காக நாளை மீண்டும் நீதிமன்றத்தில் வழக்கு அழைக் கப்பட இருக்கின்றது.

இந்த வழக்குத் தொடர்பில் மனுதா ரர்கள் என்ன வாதங்களை முன்வைக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. ஆயினும் இந்த மனு மூலமும், அதன் மீதான சட்ட வாதாட்டத்தின் மூலமும், காலத்தை சற்று தாமதிக்க வைப்பது மனுதாரர்களினதும் பிற தரப்புக்களி னதும் இலக்காக இருக்கும் என்று பேசப் படுகிறது.

நாள்கள் பிந்திச் சென்றால் அரசாங் கத்துக்கு எதிரான எதிர்ப்புணர்வு மேலும் தீவிரமடையும். அது எதிரணிக்கு உள்ளூ ராட்சி சபை தேர்தலில் கணிசமான வாய்ப் பைத் தரும் என்று பல தரப்புகளிலும் பேசப்படுகின்றது.

அதுவும், பெரும் நெருக்கடியாக மாறி வரும் அரிசித் தட்டுப்பாடு போன்ற நெருக்குவாரங்களுக்கு மத்தியில் தமிழ் – சிங்களப் புத்தாண்டை மக்கள் எதிர்கொள்ள வைத்த பின்னர் – அந் தக் கையோடு – தேர்தல் வாக்களிப்பை முன்னெடுத்தால், ஆளும் தரப்புக்கு கணிசமான பின்னடைவை ஏற்படுத்த லாம் என்பது எதிரணிகளின் திட்டமாக உள்ளது. இப்போதைய இந்த வழக் கின் காரணமாக மேற்படி சட்டமூலத்தை நாடாளுமன்றம் அங்கீகரிப்பது பெப்ர வரி மாதம் கடைசி வாரத்துக்கு தள்ளப் படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அப்படி நடக்குமானால் அதற்குப் பின்னர் சட்டத்தை நிறைவேற்றி தேர் தலை தமிழ் – சிங்களப் புது வருடத்திற்கு முன்னர் நடத்தி முடிப்பது பெரும்பாலும் சாத்தியம் இல்லாததாகப் போய்விடும் என்று கருதப்படுகின்றது.

இடையில் இலங்கையில் மிக முக் கிய பண்டிகையாக கருதப்படும் தமிழ் – சிங்களப் புது வருடம் வருவதால் அதிலிருந்து ஓரிரு வாரங்கள் தள்ளியே தேர்தலை நடத்தக்கூடிய சூழல் ஏற்படும் என இப்போது கூறப்படுகிறது.

எது, எப்படியாயிலும் இந்த மனு மீதான விசாரணையை உயர்நீதிமன் றம் நடத்தி முடிப்பதற்கு சட்டத்தின் கீழ் மூன்று வார கால அவகாசம் உண்டு. அதுவரை இந்த விவகாரம் உயர்நீதிமன் றத்தில் இழுபடுமா அல்லது ஓரிரு நாள் அமர்வுடன் தன்னுடைய முடிவை உயர்நீதி மன்றம் அறிவிக்குமா என்பதில்தான் இந்தத் தேர்தல் புத்தாண்டுக்கு முன் நடைபெறுமா அல்லது அதன் பின்னர் நடக்குமா என்ற விவகாரம் தங்கி இருக் கும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கருதுகின்றன.

எது, எப்படியாயினும் இந்தச் சட்ட மூலம் நாடாளுமன்றுக்கு வரும்போது, கொள்கை அடிப்படையில் இலங்கை தமி ழரசுக் கட்சி அதனை எதிர்த்து வாக்களிக்க கூடிய நிலைமையே காணப்படுவதாக வும் தெரிகிறது.

உள்ளூராட்சி மன்றத்திற்கான தற்போ தைய தேர்தல் முறைமை – அதாவது வட்டாரத் தெரிவு மற்றும் பொதுப் பட்டி யல் மூலமான விகிதாசாரப் பிரதிநிதித் துவ தெரிவு என்ற இரண்டும் கலந்த முறைமை – மேற்படி உள்ளூராட்சி சபை களின் செயற்பாடுகளுக்கு பொருந்தி வராமல் குந்தகமாக உள்ளது என்று கருதும் இலங்கைத் தமிழரசுக் கட்சி, அந்தத் தேர்தல் முறைமையே மாற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நிற்பதாக தெரிகிறது. அந்த முறைமை மாற்றம் இல்லாமல் கொண்டுவரப்படும் தனித் திருத்தங்களை தமிழரசு கட்சி ஆதரிக் காது என்றும் கூறப்பட்டது.

தமிழரசுக் கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் அனைத்தும் இந்தச் சட்ட மூலத்தை எதிர்த் தாலும் கூட அதனை நிறைவேற்றக்கூடிய முழு பலத்தோடு ஆளும் தரப்பு இருப்பது தெரிந்ததுதான்.

---

## கலாசார நிலைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது இந்தியாவுக்கும் எமக்கும் இடையே யான நல்லுறவில் ஆழமான குழியாக அமைந்துவிடக்கூடாது என நாம் திடமாக நம்புகின்றோம். 'யாழ்ப்பாணம்' என்பது விட்டுக் கொடுக்கப்பட முடியாத எம் இனத் தின் அடையாளம் ஆகும். எனவே, இந்த விடயத்தை உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தி சீர்செய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம்."

– இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய்முரளியி டம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நேற்றுப் பிற்பகல் நேரில் சென்று கையளித்த கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தின் திடீர் பெயர் மாற்றம் தொடர்பாகத் தமது கட்சியின் நிலைப்பாட்டை விளக்கும் கடிதத்தை அவர் நேற்றுக் கையளித்தார். அதில் கூறப்பட்டிருந்தவை வருமாறு:-

"யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு அருகாமையில் திறந்த வெளி அரங்கு அமைந்திருந்த – யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரித்தான காணியில் அதற்குப் பதிலாக இந்திய மத்திய அரசின் நன் கொடையாக நிர்மாணிக்கப்பட்ட "யாழ்ப் பாணம் கலாசார மத்திய நிலையம்" 2023 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இலங்கையின் ஜனாதிபதி,ரணில் விக்கிரமசிங்க ஆகி யோர் இணைந்து திறந்து வைக்கப்பட்டது யாவரும் அறிந்ததே.

இந்த நிறுவனத்தின் நிர்வாகம் யாழ்ப் பாணம் மாநகர சபைக்கே வழங்கப்பட் டிருக்க வேண்டும். ஆனால், மாநகர சபையின் நிதி வசதியீனத்தைக் காரணம் காட்டி அவ்வாறு செய்யப்படாமல் சில முக்கிய அரசியல் காரணங்களால் யாழ்ப் பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூத ரகத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. இந்தக் கட்டடம் அதன் முழுமையான அம்சங்கள் ஆராயப்படாமல் நிர்மாணிக் கப்பட்டமையே இந்த நிலை உருவாக காரணமாகியது என்பதைச் சம்பந்தப் பட்டவர்கள் சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறிருக்கையில் கடந்த 18.01.2025 ஆம் திகதி சனிக்கிழமை இதன் பெயர் "திருவள்ளுவர் கலாசார மையம்" என மாற்றப்பட்டதாக இலங்கை யின் பிரதி கலாசார அமைச்சரும் இலங் கைக்கான இந்தியத் தூதுவரும் வேறு சிலரும் கலந்துகொண்ட சந்திப்பில் பெயர் மாற்றத்துடனான பெயர்ப்பலகை திறந்து வைக்கப்பட்டதாக ஊடகச் செய் திகள் தெரிவித்தன.

இந்த நடவடிக்கை பற்றிய அறிதல் எதுவும் இந்த மண்ணின் அரசியல் தலை வர்களுக்கோ பிரதிநிதிகளுக்கோ சிறி தளவேனும் தெரிந்திருக்கவில்லை என்பது எமக்கு மிகவும் ஆச்சரியத்தையும் மன வருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை மிகுந்த கவலையுடன் தெரிவித் துக்கொள்ள விரும்புகின்றோம்.

இந்த நடவடிக்கை பற்றிய ஆழமான அதிருப்தி உள்ளது என்பதை மட்டும் குறிப் பிட்டு, இது இந்தியாவுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையேயான ஓர் உணர்வுபூர்வமான விடயம் என்பதை யும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அத னால் விவரமாக அதிருப்தியைப் பதிவு செய்வதைத் தவிர்க்கின்றோம்.

தெய்வப் புலவர் ஐயன் திருவள்ளு வருக்கு நாமாகவே இந்த மண்ணில் பல இடங்களில் உருவச்சிலைகள் அமைத்திருக்கின்றோம். அதுமட்டுமல்ல ஔவைக்கும், மாகாத்மா காந்திக்கும், பாரதிக்கும் நாமாக இங்கு சிலை எடுத் தவர்கள் நாங்கள். தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு நாம் எதிரானவர்கள் அல்லர்.

இப்படியிருக்கையில் இலங்கைத்தமிழி னத்தின் பெருமைக்கும் இறுமாப்புக்கும் உடையதான "யாழ்ப்பாணம்" என்ற பெயரை அகற்றியமை எம்மை அவமதித் தமைக்குச் சமமாகும். இது இந்தியாவுக் கும் எமக்கும் இடையேயான நல்லுற வில் ஆழமான குழியாக அமைந்து விடக்கூடாது என நாம் திடமாக நம்புகின் றோம். "யாழ்ப்பாணம்" என்பது விட்டுக் கொடுக்கப்பட முடியாத எம் இனத்தின் அடையாளம் ஆகும். எனவே, இந்த விட யத்தை உடனடியாக மீளாய்வுக்கு உட்ப டுத்தி சீர்செய்யுமாறு வேண்டிக்கொள் கின்றோம்.

மேலும் இந்தப் புதிய பெயர் மாற்றத் துக்கான அறிவித்தலில் கூட தமிழ் மொழி மூன்றாமிடத்துக்குத் தள்ளப் பட்டுள்ளமையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இலங்கை அரசின் அரச மைப்பின் 16 ஆவது இலக்க திருத்தத்தின் படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியே நிர்வாக மொழியாகும். சிங்களம் அடுத்த நிர்வாக மொழியாக வும், ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கும் என்பது அரசமைப்பின் ஏற்பா டாக இருக்கையில் சிங்கள மொழியில் முதலாவதாகவும், ஆங்கில மொழியில் இரண்டாவதாகவும், தமிழ் மொழியில் மூன்றாவதாகவும் பெயர்ப்பலகை எழுதப் பட்டிருப்பது இந்த ஏற்பாடுகளை மீறும் செயலாகும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

பல்வேறு தரப்பினருடனும் கலந்துரை யாடிய பின்பே நல்லுறவைப் பாதிப் பின்றி பேணும் பொருட்டு இந்த மீளாய்வுக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கின் றோம்.

06

# கிளீன் ஶ்ரீலங்கா வேலைத்திட்டத்தில் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுகிறது

## பா.சத்தியலிங்கம் எம்.பி. குற்றச்சாட்டு




கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் சில விடயங்களில் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.சத்தியலிங்கம் குற்றம்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், இந்த வேலைத்திட்டத்தின் கீழ் அனைத்து மதங்களுக்கும் மதிப்பளிக்கும் வகையில் மத நல்லிணக்க அமைச்சு உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் வியுறுத்தியுள்ளார்.

இதற்கு பதிலளித்த அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க, அது தொடர்பில் உரிய வகையில் ஆராய்ந்து தீர்வு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

---

### கலாசார நிலைய...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தங்களது துரிதமான செயற்பாட்டுக்கு நன்றியுடையவராவோம்." – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன், யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் ச.கிறிஸ்நேந்திரன் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

---

### மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களின் தலைவராக இருக்கின்றார். அவர் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் என்றாலும் நாட்டு மக்களின் தலைவர் அவரே.

மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்படவில்லை. அவர் மக்களின் மனதில் என்றைக்கும் தலைவராக இருக்கின்றார்.

அவருக்கான பாதுகாப்பைக் குறைப்பதன் ஊடாகவோ அல்லது அவரை முன்னாள் ஜனாதிபதிக்கான உத்தியோக பூர்வ இல்லத்தில் இருந்து விரட்டுவதன் மூலமாகவோ மக்களின் மனதில் இருந்து அவரை நீக்க முடியாது என்பதை அநுர அரசு புரிந்துகொள்ள வேண்டும். நாட்டின் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவை மக்கள் பாதுகாப்பார்கள்." – என்றார்.

---

### ரஷ்ய இராணுவத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமர்வின்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

"தமது குடும்பத்தின் பொருளாதார மேம்பாடு கருதி வேலைவாய்ப்புக்காக இலங்கையர்கள் சட்ட ரீதியாகவும், சட்டவிரோதமான முறையிலும் வெளிநாடுகளுக்குச் செல்ல முற்படும்போது வெளிநாட்டு முகவர்களினால் ஏமாற்றப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாகப் பதிவாகியுள்ளன.

இந்த நாட்டு தமிழ் மற்றும் சிங்கள இளைஞர்கள் இவ்வாறு முகவர்களால் ஏமாற்றப்பட்டு, ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமான முறையில் இணைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோர் எம்மிடம் முறையிட்டு தமது பிள்ளைகளை மீட்டுத் தருமாறு வலியுறுத்துகின்றார்கள்.

இதற்கமைய அதிர்ஷ்ட ராஜா கேமஸ் விதூஷன் – யாழ்ப்பாணம், பகிரதன் – கரவெட்டி, சுந்தரலிங்கம் பாலச்சந்திரன் – முல்லைத்தீவு, பிரதாப் – யாழ்ப்பாணம், சிவேஸ் – யாழ்ப்பாணம், ஆகியோர் முகவர்களால் ஏமாற்றப்பட்டு ரஷ்ய இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் 2022.10.20 ஆம் திகதி ரஷ்யா – பெலராஸ் எல்லையில் விஜயகுமார் முகுந்தன் காணாமல் போயுள்ளார். இவருக்கு நேர்ந்தது என்னவென்பது இதுவரை தெரியவில்லை.

ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ள இலங்கையரின் எண்ணிக்கை, உயிரிழந்துள்ளவர்களின் விவரம் மற்றும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு இராஜதந்திர மட்டத்தில் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னவென்பதை அரசு அறிவிக்க வேண்டும்.

ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் சொல்லொணாத் துயரங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். தமது உறவுகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். ஆகவே, நெருக்கடிக்குள்ளாகியுள்ள எமது நாட்டவர்களை மீட்க அரசு துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்." – என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, "இந்த விடயம் தொடர்பில் இராஜதந்திர மட்டத்தில் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முன்வைக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு தரவு அடிப்படையில் பதிலளிக்க வேண்டும். ஆகவே, ஒரு வார கால அவகாசம் தாருங்கள்." – என்றார்.

மீண்டும் எழுந்து உரையாற்றிய, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், "முன்வைக்கப்பட்டுள்ள இந்த விடயத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு அரசு ஒரு வார காலத்துக்குள் சிறந்த பதிலை வழங்க வேண்டும்." – என்றார்.

# நாகர்கோவிலில் வீட்டிற்குத் தீ!



வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மேற்கு பகுதியில் வீடு ஒன்றில் நேற்று அதிகாலை தீப்பிடித்துள்ளது.

அதிகாலை 3.30 மணியளவில் வீடு தீப்பிடிப்பதை கண்ட குடும்பஸ்தர் கடும் முயற்சியின் பின் தீயை அணைத்துள்ளார்.

விசமிகளால் தனது வீட்டிற்கு தீ வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் குடும்பஸ்தர் இந்தச் சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அதனடிப்படையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த மருதங்கேணி பொலிஸார் தீ பிடித்த வீட்டை பார்வையிட்டமையுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# 32 பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தம்பதியினருக்கு வவுனியா நீதிமன்றால் 14 நாள்கள் விளக்கமறியல்!

(கி.வசந்தன்)

32 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட நிலையில் வவுனியாவில் மறைந்திருந்த தம்பதியினர் வவுனியா தனிப்படை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

ருமேனியாவிற்கு வேலைக்கு அனுப்புவதாகக் கூறி சுமார் 30 மில்லியன் ரூபாய் மோசடி செய்தனர் என ஒரு தம்பதியினருக்கு எதிராக முறைப்பாடுகள் மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸாருக்குச் செய்யப்பட்டிருந்தது.

விசாரணையின் போது 28க்கும் மேற்பட்ட நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக வாக்குறுதி அளித்து நிதி மோசடி செய்திருப்பதும் தெரியவந்துள்ளது. அவர்கள் 30 மில்லியன் ரூபா நிதியை மோசடி செய்தனர் எனச் செய்யப்பட்ட வழக்குக்கு அமைய ஏறாவூர் நீதிமன்றத்தால் குறித்த கணவனுக்கு எதிராக 16 பிடியாணைகளும், மனைவிக்கு எதிராக 16 பிடியாணைகளும் ஆக 32 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், இந்தத் தம்பதியினர் மட்டக்களப்பில் இருந்து வெளியேறி வவுனியா, தோணிக்கல் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைந்திருந்த நிலையில் வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்கர் சோமரட்ண விஜெயமுனியின் வழிகாட்டலில் வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயக்கொடி தலைமையில் சிறப்பு தனிப்படை பொலிஸார் தோணிக்கல் பகுதியில் சுற்றி வளைப்பை மேற்கொண்டு இந்தத் தம்பதியினரை செவ்வாய் கிழமை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் 55 வயதும் அவரது மனைவி 48 வயதும் உடையவராவார். மேலதிக விசாரணைகளின் பின் இருவரையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்திய நிலையில 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களில் நேற்று புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து சோதனையின்போது திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 6 பேர் உள்ளிட்ட 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட ரோந்து சோதனை நடவடிக்கை நேற்று மாலை 6 மணி முதல் பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

பருத்தித்துறை தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தலைமையில் பருத்தித்துறை பொலிஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர் இணைந்து, பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்கோவளம், புனித நகர், தும்பளை உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட ரோந்து சோதனையின்போது சந்தேகநபர்கள் ஐவர், சாதாரண பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவர், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஆறு பேர், கசிப்புடன் ஒருவர் என 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தப் பருத்தித்துறை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, பருத்தித்துறை – முல்லைத்தீவு வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் இரண்டு வழித்தட பயண அனுமதி இன்றி சேவையில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டு கையகப்படுத்தப்பட்டுள்ளன.

## முன்னாள் அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணத்துக்காக அரசால் பெறப்பட்ட 61 இலட்சம் ரூபாவைத் தேர்தல் பிரசாரங்களுக்குத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரைத் தவிர, இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக அவரது மனைவி உட்பட மேலும் 6 பேரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இன்று வியாழக்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பலிக்கடாவாகும் ஆணைக்குழு

முன்னைய ஆட்சிகளில் - அரசுகளில் - ஊழல், முறைகேடுகள், லஞ்சம், முறையற்ற வகையில் சொத்துச் சேர்த்தல் போன்ற மோசடிகள் பெருமளவில் இடம்பெற்றன என்று தெரிவித்து, தாங்கள் அதிகாரத்துக்கு வந்தால் குறுகிய காலத்தில் இத்தகைய மோசடிக் காரர்களை கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய தண்டனை வாங்கிஜ் கொடுப்போம் என்று பெரும் பிரச்சாரத்தை முன்னெடுத்து, அந்தப் பிரச்சாரத்தின் பெறுபேறாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது தேசிய மக்கள் சக்தி.

புதிய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து நூறு நாள்கள் கடந்து விட்டன. புதிய அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ற அமோக வெற்றியுடன் அதிகாரத்தைக் கைப்பற்றி இரண்டு மாதங்கள் கடக்கின்றன.

ஆனால் அரசு தலைமை மக்களுக்கு வாக்குறுதியளித்த - திருடர்களைப் பிடிக்கும் விவகாரம் குளத்தில் போட்ட கல்லாக தேங்கி கிடக்கின்றது. எந்த முன்நகர்வும் இல்லை.

இதனால் இந்த ஆட்சியாளர்கள் மீது மக்களின் நம்பிக்கை பெருமளவு குறைந்து வருகின்றது. திருடர்களை - ஊழல், மோசடிக்காரர்களை - மடக்கிப் பிடிக்கும் திறனற்ற, லாயக்கற்ற அரசு இது என்ற கருத்து நிலைப்பாடு மக்கள் மத்தியில் உருவெடுத்து வருகையில், இந்தக் குற்றச்சாட்டில் இருந்து தப்புவதற்காக, அவற்றைப் புதிய தரப்புகள் மீது சுமத்துவதற்காக அவற்றைத் தேடுகிறார் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க.

தங்களின் இயலாத் தன்மையை மூடி மறைப்பதற்கு வேறு தரப்புகள் மீது அவர் குற்றம் சுமத்த முனைகிறார் என்பது தெளிவாகின்றது.

முன்னைய ஆட்சிக் காலக் குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு தேவையான பொலிஸ் சேவை மாற்றங்களை அரசு விரும்பியபடி முன்னெடுப்பதற்கு சுயாதீன பொலிஸ் ஆணைக் குழு ஒத்துழைக்கவில்லை என்ற சாரப்படக் கருத்து வெளியிட்டு பிரச்சினையை பொலிஸ் ஆணைக் குழு மீது சுமத்தித் தப்புவதற்கு முனைகின்றார் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க.

அநுர குமார திஸாநாயக்கவின் 'வளமான நாடு அழகான வாழ்க்கை' தேர்தல் விஞ்ஞாபனத்தில், பொலிஸ் சேவையில் அரசியல் மயப்படாமல் சகல நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்களை செய்வதற்கு பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படும் என உறுதியளித் திருந்தது.

அரசு தரப்பிலிருந்து கோரப்பட்ட சில பொலிஸ் உயரதிகாரிகளின் இடமாற்றங்கள் தொடர்பில் மேலதிக விளக்கங்களை சுயாதீன பொலிஸ் ஆணைக் குழு கோரியமைய ஒட்டியே ஜனாதிபதி இத்தகைய கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

"இப்போது பொலிஸாரை எமக்கு வேண்டிய வகையில் இடமாற்றம் செய்ய முடியாது. அதற்கென்று ஒரு பொலிஸ் ஆணைக்குழு இருக்கிறது. ஆணைக்குழுவில் அந்த இடமாற்றங்களை செய்ய வேண்டும். இந்த விடயத்தில் சிலருக்கு அந்த ஆணைக்குழு போதுமான அளவு செய்யவில்லை. அதில் எனக்கும் கொஞ்சம் குழப்பமாக இருக்கிறது. ஆணைக்குழுவின் தலைவர்களுக்கு நான் கூறுகின்றேன்" - என ஜனாதிபதி களுத்துறை, கட்டுகுருந்த பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

'ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லை என்றானாம்' என்ற கதையாக இப்போது பழைய திருடர்களைப் பிடிக்க லாயக்கற்ற அநுர அரசு அந்த இயலாமையை மூடி மறைக்க பொலிஸ் ஆணைக் குழுவைப் பலிக்கடாவாக்க முயல்கின்றது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.



# ‘நகரைத் துப்புரவு செய்தல்’ வேலைத்திட்டம் பற்றி வடக்கு ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

“இது எங்களின் நகரம். நாங்கள் வாழும் நகரம். வாழப் போகும் நகரம் என்பதை ஒவ்வொருவரும் மனதிலிருத்திச் செயற்பட வேண்டும்.” – என்று வலியுறுத்திய வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், “தூய்மையான இலங்கை” செயற்றிட்டத்தின் கீழ் “நகரைத் துப்புரவு செய்தல்” வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அப்பால் நகரை அதே நிலையில் பேணுவதே முக்கியம் என்றும் குறிப்பிட்டார்.

“தூய்மையான இலங்கை“ செயற்றிட்டம் முன்னெடுப்புத் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

“தூய்மையான இலங்கை“ செயற்றிட்டத்தின் கீழ், எதிர்வரும் 3 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபையால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் பாதுகாப்புத் தரப்பினர், பாடசாலை மாணவர்கள், திணைக்களப் பணியாளர்கள், பொதுமக்கள் பங்கேற்புடன் துப்புரவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இது தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

கடந்த காலங்களிலும் பல தடவைகள் நகரைச் சுத்தம் செய்தல், கடற்கரையோரங்களைச் சுத்தம் செய்தல் ஆகிய செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், துப்புரவு செய்த மறுநாளே குப்பைகளை அந்த இடங்களில் பொதுமக்கள் கொட்டுவதால் சுத்தம் செய்ததன் நோக்கம் நிறைவடையாத சந்தர்ப்பங்களே அதிகம் எனத் தெரிவித்தார்.



இம்முறை அவ்வாறான நிலைமை ஏற்படக் கூடாது என ஆளுநர் குறிப்பிட்டார்.

எமது மக்களிடையே இவ்வாறான ஒழுக்கமின்மை கலாசாரம் அதிகரித்துச் செல்வதாக வேதனை வெளியிட்ட ஆளுநர், 1970 – 1980 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் யாழ்ப்பாணம் நகரமே இலங்கையில் தூய்மையான நகரமாக அடையாளப்பட்டிருந்ததை நினைவுகூர்ந்தார்.

பாதுகாப்புத் தரப்பினர் தமது படையினரை இந்தச் செயற்றிட்டத்துக்கு வழங்குவதாகத் தெரிவித்தனர். ஆனால், குப்பைகளைப் போடும் மக்களும் உணரும் வகையில் அவர்களையும் இந்தச் செயற்றிட்டத்தில் நிச்சயம் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

ஒவ்வொரு இடங்களிலும் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களும் அதில் உள்ளடக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் பாதுகாப்புத் தரப்பினர் வலியுறுத்தினர்.

எங்கள் பிரதேசத்தைத் துப்புரவாக வைத்திருக்கும் இந்தச் செயற்றிட்டத்தை முதல் கட்டமாக யாழ். மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை பிரதேசங்களில் ஆரம்பித்தாலும் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களிலும் இதை நடைமுறைப் படுத்த வேண்டும் என வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் கோரிக்கை விடுத்தார்.

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு நடைபெற்ற பின்னர் அந்தப் பகுதிகளில் மக்கள் எதிர்காலத்தில் குப்பைகளைத் தரம் பிரித்து போடுவதற்குரிய ஒழுங்குகளை யாழ்.மாநகர சபை முன்னெடுக்கும் என்றும், அதேநேரம் குப்பைகளைக் கொட்டுபவர்களைக் கண்காணிக்க சி.சி.ரி.வி. கமராக்களை பொருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கும் எனவும் யாழ். மாநகர சபையின் ஆணையாளர் எஸ்.கிருஷ்ணேந்திரன் தெரிவித்தார்.

மேலும் மாநகர சபையின் உபவிதிகள் விரைவில் வர்த்த

தொடர்ச்சி▼









# ‘நகரைத் துப்புரவு செய்தல்’ வேலைத்திட்டம் பற்றி வடக்கு ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்







தொடர்ச்சி▲

மானியில் வெளியிடப்பட்ட பின்னர், அதை மீறி குப்பைகளைக் கொட்டுபவர்களுக்கு அந்த இடத்திலேயே தண்டம் விதிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கட்டாக்காலி கால்நடைகள் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதம செயலர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நகரை தூய்மையாக வைத்திருப்பது என்பது குப்பை கூழங்களை அகற்றுவதுடன் மாத்திரம் முடிந்துவிடக்கூடாது. யாழ். நகரின் அழகைக் குலைக்கும் வகையில் பஸ்கள் உள்ளன எனவும், அவற்றையும் வேறிடங்களுக்கு அகற்ற வேண்டும் எனவும் யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத் தலைவர் இ.ஜெயசேகரன் கோரினார்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ். நிலையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வர்த்தக நிலையங்களால் எதிர்கொள்ளும் சிரமங்களையும் சுட்டிக்காட்டிய அவர் முன்னர் முன்மொழியப்பட்டவாறு பஸ் நிலையம் அமைந்துள்ள பகுதியில் நகருக்கான தரிப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் தனித்துவமான நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவித்த ஆளுநர், அவற்றுக்கான உரிய ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், யாழ். மாவட்ட செயலர், திணைக்களப் பணிப்பாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கனடாத் தூதரைச் சந்தித்துப் பேசிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்



இலங்கைக்கான கனடாத் தூதுவர் டேவிட் மெக்கின்னனுக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலே முக்கிய சந்திப்பு சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு நேற்று புதன்கிழமை கொழும்பில் உள்ள கனடாத் தூதுவரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது தமிழ் மக்களின் சமகால அரசியல் விவகாரம் மற்றும் புதிய அரசமைப்பு தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.



# அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டன

சதொச நிறுவனம் நேற்று முதல் பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைத்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ கிராம் நிலக் கடலையின் விலை 995 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் சிவப்பு சீனியின் விலை 300 ரூபாவாகவும் குறைக்கப் பட்டுள்ளது.

அத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங் கின் விலை 30 ரூபாவால் குறைக் கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 180 ரூபாவாக பதிவாகியுள்ளது.

மேலும் ஒரு கிலோ கிராம் சிவப்பு கௌப்பி 30 ரூபாவினால் குறைக் கப்பட்டு 765 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

இதேபோல், ஒரு கிலோ கிராம் நெத் தலி 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள துடன், அதன் புதிய விலை 940 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் செத் தல் மிளகாய் 830 ரூபாவிற்கும், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் உப்பு 230 ரூபாவிற்கும், ஒரு கிலோ கிராம் பருப்பு 288 ரூபாவிற் கும் விற்பனை செய்யப்படவுள்ளன. ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனி 240 ரூபாவிற்கு விற்பனை செய்யப் படவுள்ளது.

மேலும், ஒரு கிலோ கிராம் பாஸ்மதி அரிசியின் விலை 645 ரூபாவாக பதி வாகியுள்ளது.



# கொழும்பு பங்குச்சந்தை விலைச் சுட்டெண் அதிகரிப்பு

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று அதிகரிப்பைப் பதிவு செய் தது.

அதனடிப்படையில், அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 231.64 புள்ளிகளால் அதிகரித்தது.

அத்துடன் கொழும்பு பங்குச் சந்தை யின் அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் 16,828.80 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

இது பங்கு விலைச் சுட்டெண்ணில் இதுவரை பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச மதிப்பாகக் கருதப்படுகின்றது.

அதன்படி, கொழும்பு பங்குச் சந்தை யின் மொத்தப் புரள்வானது நேற்று 10.66 பில்லியன் ரூபாவாகப் பதி வாகியது.



# அமைச்சர்களுக்கு அதிசொகுசு இல்லங்கள் வழங்குவதை நிறுத்த அரசாங்கம் தீர்மானம்

அமைச்சர்களுக்கு அதிசொகுசு உத்தியோகப்பூர்வ இல்லங்கள் வழங்கப் படுவதை இடைநிறுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவ்வாறான 30 இல்லங்கள் தொடர்பில் தற்போது மதிப்பீட்டு நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொது நிர்வாக அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக உத்தியோக பூர்வ இல்லங்களாக அமைச்சுக்களின் கீழுள்ள 20 இல்லங்கள் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் நிர்மாணிக்கப் பட்டுள்ள 15 பங்களாக்கள் தொடர்பிலும் மதிப்பீடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளின் பின்னர் அதிசொகுசு இல்லங்களை எதற்கு பயன்படுத்துவதென தீர்மானிக்கப்படும் என்று அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலா தொழிற்துறையை மேம் படுத்தல் உள்ளிட்ட பயனுள்ள செயற் பாடுகளுக்காக இந்த இல்லங்களை பயன்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



# 24, 27 ஆம் திகதிகளில் பருத்தித்துறை கடற்பரப்பிற்குள் பிரவேசிக்க வேண்டாம்

எதிர்வரும் 24 மற்றும் 27ஆம் திகதிகளில் யாழ் - பருத்தித்துறை கடற்பரப்பில் இலங்கை கடற்படை யினர் துப்பாக்கிச்சூட்டு பயிற்சிகளில் ஈடுபடவுள்ளதால் மேற்படி பகுதிக் குள் பிரவேசிக்க வேண்டாமென மீன வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள் ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை இந்தப் பயிற்சி நடவடிக்கைகள் நடை பெறவுள்ளன.

எதிர்வரும் 27ஆம் திகதியும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கடற்படையினரின் பயற்சி நட வடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

இதனால், மேற்படி கடற்பரப்புகளில் பிரவேசித்து மீன்பிடி நடவடிக்கைக ளில் ஈடுபடவேண்டாமென மீனவர்க ளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட் டுள்ளது.




# அனர்த்தங்களினால் உயிரிழப்பவர்களின் குடும்பங்களுக்கான இழப்பீடு அதிகரிப்பு

பலத்த மழையுடனான வானிலையினால் ஏற்படும் அனர்த்தங்களினால் உயிரிழப்பவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு ஒரு மில்லியன் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இந்த தொகை 250,000 ரூபாவாகக் காணப்பட்டது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய இழப்பீடு வழங்குவதற்காக 30 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

24 மாவட்டங்களுக்கு தலா ஒரு மில்லியன் ரூபா வீதமும் அனுராதபுரம் மாவட்டத்திற்கு 6 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் என்ற ரீதியில் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் ஆலோசனைக்கமைய எந்தவொரு அனர்த்த நிலைமைகளையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.



# 75 மில்லிமீட்டர் வரை மழைவீழ்ச்சி பதிவாகும்

## 56 நீர்தேக்கங்கள் வான்பாய்கின்றன

கிழக்கு, வட மத்திய, ஊவா, வடமேல் மாகாணங்களின் சில இடங்களில் 75 மில்லிமீட்டர் வரை மழைவீழ்ச்சி பதிவாகக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளைகளில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென திணைக்களம் குறிப்பிட்டது.

நாட்டிலுள்ள 56 பாரிய நீர்தேக்கங்கள் தொடர்ந்து வான்பாய்கின்றன என நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இராஜாங்கனை, சேனாநாயக்க சமுத்திரம், மின்னேரிய, பதவிய, கவுடுல்ல, லுனுகம்வேஹர உள்ளிட்ட நீர்தேக்கங்கள் இவ்வாறு வான்பாய்கின்றன.

60 சிறிய குளங்களும் வான்பாய்கின்றன என நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

மழையுடனான வானிலையால் மல்வத்து ஓயாவின் தந்திரிமலை பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

யான் ஓயா பெருக்கெடுத்ததால் ஹொரவப்பொத்தான பகுதியில் சிறியளவில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.



# டில்லியில் மது கிடைக்கிறது குடிதண்ணீர்தான் இல்லை!

## பிரசாரத்தில் பிரதமர் மோடி விமர்சனம்

டில்லியில் மது கிடைக்கிறது. ஆனால், குடிநீர்தான் கிடைப்பதில்லை என்று ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சியை பிரதமர் நரேந்திர மோடி கடுமையாக விமர்சித்துள்ளார்.

டில்லி சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, டில்லி பா.ஜ.க. தொண்டர்களுடன் பிரதமர் மோடி இணையவழி ஊடாக கலந்துரையாடினார். இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

“டில்லியில் ஆம் ஆத்மி கட்சி தனது அடித்தளத்தை இழந்து வருகிறது. அக்கட்சி மக்கள் முன் அம்பலப்பட்டு நிற்கிறது. அதனால்தான் அவர்கள், தினமும் புதிய புதிய அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார்கள்.

ஆம் ஆத்மியை தோற்கடிக்க சாதனை அளவில் வாக்குப்பதிவு நடப்பதை தொண்டர்கள் உறுதி செய்ய வேண்டும். ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் 50ழ க்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெறுவதை இலக்காகக் கொண்டு செயல்பட வேண்டும்.

ஆம் ஆத்மி கட்சி மீது தங்களுக்கு இருக்கும் கோபத்தை மக்கள் வெளிப்படையாக வெளிப்படுத்துகிறார்கள். அக்கட்சியை அவர்கள் கேள்வி கேட்கிறார்கள். அதன் வாக்குறுதிகளை நினைவூட்டுகிறார்கள்.

டில்லியில் மது கிடைக்கிறது, ஆனால் குடிதண்ணீர்தான் இல்லை. கேஜ்ரிவாலின் ‘வசந்தமாளிகை’ ஆம் ஆத்மியின் வஞ்சகம் மற்றும் அதன் பொய்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.கவின் வாக்குச்சாவடி ஊழியர்களின் பலம் கட்சிக்கு மிகப்பெரிய வெற்றியை உறுதி செய்யும்.

பெண்கள் ஆம் ஆத்மி மற்றும் காங்கிரஸை நம்பவில்லை. இமாச்சலப் பிரதேச பெண்கள் போராடி வருகின்றனர். பஞ்சாபில், ஆம் ஆத்மி கட்சி பெண்களுக்கு பணம் தருவதாக உறுதியளித்தது, ஆனால் எதுவும் நடக்கவில்லை.

ஆம் ஆத்மி பொய்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்சி. ஆனால், பா.ஜ.க உண்மையை அடிப்படையாகக் கொண்டது. நாம் சொல்வதை நாம் நிறைவேற்றுகிறோம். மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் ஒடிசாவில், பல்வேறு திட்டங்களின் கீழ் பெண்களுக்கு பணம் தருவதாக உறுதியளித்தோம், அதை நிறைவேற்றினோம்.

நாட்டில் இளைஞர்களின் சக்தி மிகவும் முக்கியமானது. கடந்த பத்து ஆண்டுகளில், ஸ்டார்ட் அப்கள், நிறுவனங்கள் மற்றும் பிற திட்டங்கள் மூலம் இளைஞர்களுக்கான மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளோம். ஆனால் டில்லியில், ஆம் ஆத்மி இளைஞர்களை ஏமாற்றி வருகிறது.

டில்லி இளைஞர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்த முறை அவர்கள் தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கத்திற்கு வாக்களிப்பார்கள். ஆம் ஆத்மியின் பொய்களால் அவர்கள் சோர்வடைந்துள்ளனர். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், பா.ஜ.க. மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வரும்.

டில்லியில் உள்ள பாடசாலைகளுக்கு நிறைய செய்திருப்பது போல் ஆம் ஆத்மி பேசி வருகிறது. ஆனால் அவர்கள் எதுவும் செய்யவில்லை என்பது மக்களுக்குத் தெரியும். டில்லியில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளை பா.ஜ.க. சரி செய்யும். அதனால்தான் நாம் நமது தேர்தல் அறிக்கையில், கே.ஜி முதல் பி.ஜி வரை இலவச கல்வி வழங்கப்படும் என உறுதியளித்துள்ளோம். ” என்று தெரிவித்துள்ளார்.



# 2026 இற்குப் பிறகு திராவிடம் துடைத்து தூர வீசப்படும்; சீமான்

“தள்ளாடிக் கொண்டிருக்கிறது திராவிடம். பேரெழுச்சிப் பெற்றிருக்கிறது தமிழ்த்தேசிய அரசியல். பெரியார், திராவிடம் இல்லாமல் அரசியல் இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால், அவை எதுவும் இல்லாமல்தான், தனித்து நின்று மூன்றாவது பெரிய கட்சியாக அங்கீகாரம் பெற்றிருக்கிறேன்.”

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

பெரியார் குறித்த சர்ச்சைப் பேச்சைக் கண்டித்து, சென்னை நீலாங்கரைப் பகுதியில் உள்ள நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இல்லத்தை பெரியாரிய ஆதரவு இயக்கங்கள் முற்றுகையிடும் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். இதனிடையே சீமான் இல்லத்தில் அவரது ஆதரவாளர்கள் திரண்டிருந்தனர். முற்றுகைப் போராட்டத்தால் அசம்பாவித சம்பவங்கள் ஏற்படுதைத் தடுக்க அங்கு ஏராளமான பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் சீமான் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“என்னுடைய கருத்து தவறு என்றால், பெரியாரின் கருத்துதான் தவறு. நான் புதிதாக ஒரு கருத்தைக் கூறவில்லை. பெரியார் ஏற்கெனவே பேசியதை எடுத்து பேசுகிறோம். அதில் என்ன தவறாகி விட்டது. எனவே, அந்த கருத்துகள் தவறு என்றால் அதற்கு பெரியார்தான் பொறுப்பேற்க வேண்டும். எது தவறு என்று கூற வேண்டும்.

பெரியார் குறித்து பேசியதற்காக என் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. என்னிடம் கேட்கும்போது, பெரியார் பேசியதற்கான ஆதாரங்களை நான் காட்டுவேன். எதை ஆதாரமாக வைத்து பேசினேன் என்று கூறுவேன். திருமுருகன் காந்தி பேசாததா? நான் பேசிவிட்டேன். பெரியாரை அதிகமாக விமர்சித்தது திமுகதான் என்று அவர் பேசியிருக்கிறார். அதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள். இதெல்லாம் அவரவர் தேவைக்கேற்ப பேசுவார்கள்.

என்னுடைய போட்டோவை எடிட் செய்து கொடுத்ததாக கூறும் நபர் யார்? 15 வருடமாக அவர் எங்கு போய் இருந்தார். என்னுடைய போட்டோவை ஏன் அவர் எடிட் செய்து கொடுக்க வேண்டும்? அதற்கான தேவை என்ன? எங்கிருந்து எடுத்துக் கொடுத்தார்? அந்தப் படத்தை எப்படி வெட்டி ஒட்டிக் கொடுத்தார். அந்த நபர் முதலில் என்னை நேரில் பார்த்திருக்கிறாரா? பேசியிருக்கிறாரா? வன்னியருக்கான 10.5 வீத இடஒதுக்கீட்டை நான் ஆதரித்து பேசும்போது, போட்டோ எடிட் செய்துகொடுத்ததாக கூறும் நபர் என்னிடம் பேசியிருக்கிறார்.

உங்கள் பெரியார் மீது அடி விழுந்த வுடனே, இங்கே பிரபாகரன் பொய் என்று கூறுகிறார்கள். அதுதான் பெரியாரா பிரபாகரனா என மோதுவது என்றாகிவிட்டதே, மோத வேண்டியது தானே?


நாம் தமிழர் கட்சி என் தாத்தாவுடையது. ஒவ்வொரு தமிழனுக்கும் உரிமை உடையது. சோவுக்கும், குருமூர்த்திக்கும் நாம் தமிழர் கட்சிக்கும் சம்பந்தம் என்ன இருக்கிறது. கட்டுக்கதையை கூறுகின்றனர். நான் அவர்களுடன் இருந்து வளர்ந்தவன் என்ற அடிப்படையில் மதிப்பும் மரியாதையும் வைத்திருப்பதால் தானே இத்தனை பேர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையாகவே இந்த சோவும், குருமூர்த்தியும் வந்து எனக்கு நாம் தமிழர் கட்சியின் பெயரை வாங்கி கொடுத்தார்களா?

பெரியார் உங்களுக்குத் தேவை. பூஜை அறையில் வைத்து பூஜை செய்யுங்கள். எங்களுக்குத் தேவை இல்லை. முதலில் அடிப்படையிலேயே பெரியார் பிழையானவர். தமிழ், தமிழர், தமிழர் அரசியல் என்று பேசுவது பித்தலாட்டம். திராவிட எழுச்சியைத் தடுப்பதற்கு செய்வதற்கான அயோக்கியத்தனம். இது ஆரியர்களுக்கு செய்கிற கைக்கூலித்தனம் என்று பெரியார் பேசியிருக்கிறார்.

எங்களைப் படிக்க வைத்தவர் காமராஜர். குடிக்க வைத்தது திராவிடம். பெரியாரின் பரிணாம வளர்ச்சிதான் தி.மு.க. பெரியார் பெயரைச் சொல்லி போராடும் இந்த புரட்சியாளர்கள், அண்ணா பல்கலை. மாணவி துஷ்பிரயோக சம்பவத்தின்போது வாயை மூடிக்கொண்டு இருந்ததற்கான காரணம் என்ன?

நீங்கள் பெரியாரைக் காப்பாற்ற போராடுகிறீர்கள்? நாங்கள் முல்லைப் பெரியாற்று நதி உரிமையைக் காக்கப் போராடுகிறோம். இத்தனை ஆண்டு காலம் அதிகாரத்தில் இருந்தவர்களால், அந்த அணைக்கு கீழே உள்ள சிற்றணையை தூர்வார துப்பில்லை. பெரியாரை தூக்கி வருகிறார்கள்.

தள்ளாடிக் கொண்டிருக்கிறது திராவிடம். பேரெழுச்சிப் பெற்றிருக்கிறது தமிழ்த்தேசிய அரசியல். பெரியார், திராவிடம் இல்லாமல் அரசியல் இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால், அவை எதுவும் இல்லாமல்தான், தனித்து நின்று மூன்றாவது பெரிய கட்சியாக அங்கீகாரம் பெற்றிருக்கிறேன். 2026 இற்குப் பிறகு, இந்த திராவிடத்தை துடைத்து தூரவீசப்படும்.” – என்றார்.



# ட்ரம்ப் பதவியேற்ற சில மணிநேரங்களில் சீன - ரஷ்யத் தலைவர்கள் பேச்சு!

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற சில மணி நேரங்களின் பின்னர் சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோர் காணொளி மூலம் கலந்துரையாடியுள்ளனர்.

சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த இந்த காணொளி அழைப்பில் இரு நாட்டு தலைவர்களும் ட்ரம்பின் நிர்வாகத்துடனான தங்கள் வருங்கால தொடர்புகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன், இருதரப்பு உறவுகளை உயர்ந்த மட்டத்துக்கு கொண்டு செல்வதாகவும் இதன்போது அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

வெளிப்புற நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொண்டுள்ள நிலையில், பெய்ஜிங் மற்றும் மொஸ்கோவின் மூலோபாய ஒருங்கிணைப்பை ஆழப்படுத்தவும், பரஸ்பர ஆதரவை உறுதிப்படுத்தவும், நியாயமான நலன்களைப் பாதுகாக்கவும் முன்வருமாறு விளாடிமிர் புடினுக்கு சீ ஜின்பிங் அழைப்பு விடுத்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரஷ்யாவும் சீனாவும் 'நட்பு, பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஆதரவின் அடிப்படையில்' உறவுகளை வளர்த்து வருவதாக சீ ஜின்பிங் கூறியுள்ளார்.

சர்வதேச விவகாரங்களில் ரஷ்யா மற்றும் சீனாவின் கூட்டுப் பணி ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது எனவும் இதன்போது அவர் குறிப்பிட்டுள்ளார் என க சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# ஹிஸ்புல்லா அமைப்பின் முன்னணி தளபதி சுட்டுக்கொலை!



ஹிஸ்புல்லாவின் முன்னணி தளபதி ஷேக் ஹம்மாடி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

லெபனானில் உள்ள அவரது வீட்டிற்கு வெளியே நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பிரிவினால் தேடப்படும் பட்டியலில் இவர் இடம் பெற்றிருந்தார்.

நேற்று முன்தினம் இரவு கிழக்கு லெபனானில் உள்ள அவரது வீட்டின் முன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என லெபனான் செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஷேக் ஹம்மாடியின் கொலைக்கான காரணம் இதுவரை வெளிவரவில்லை.

நீண்டகால தனிப்பட்ட பகை காரணமாக இந்தக் கொலை நடந்திருக்கலாம் என்று உள்ளூர் தகவல்கள் ஊகித்தாலும், எந்த உத்தியோகபூர்வ அறிக்கையும் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

இந்தத் தாக்குதலுக்கு எந்தக் குழுவோ அல்லது தனிநபரோ இதுவரை பொறுப்பேற்கவும் இல்லை.

# விமான நிலைய ஓடுபாதைகளில் திருத்தம் செய்யும் தென்கொரியா

விமானநிலைங்களின் ஓடுபாதைகளுக்கு அருகில் உள்ள சுவர்களை அகற்ற தென்கொரியா தீர்மானித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 179 பேரின் உயிரைக் காவுகொண்ட தென்கொரிய விமான விபத்தைத் தொடர்ந்து நாடு முழுவதும் ஒன்பது விமான நிலையங்களில் சுவர்களை அகற்ற தென்கொரியா தீர்மானித்துள்ளது.

இதேநேரம் ஏழு விமான நிலையங்களின் ஓடுபாதையின் பாதுகாப்பும் மேம்படுத்தப்படவுள்ளதாக தென்கொரியா அறிவித்துள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 23.01.2025




இன்று ஆக்க பூர்வமான நாளாக அமையும். நீங்கள் புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் இன்று உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.நீங்கள் உற்சாகத்துடன் சிறப்பாக பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இருவரும் உறவின் மதிப்பை உணர்ந்து ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்துவீர்கள்.

இன்று உங்களின் பணத் தேவைகள் பூர்த்தியாகலாம். உங்கள் சேமிப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாளின் போக்கைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். உங்கள் கனவுகளும் விருப்பங்களும் நிறைவேறும். தொலை தூரத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கப்பெறுவீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள். தொழில் சம்பந்தமான பயணம் மேற்கொள்வீர்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணையிடம் நீங்கள் மிகவும் அன்பாக நடந்து கொள்ள முயற்சிப்பீர்கள். உங்கள் உறவு சிறப்பாகும். இருவரும் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் இருப்பீர்கள்.

உங்களிடம் அதிக அளவில் பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மன நிறைவைத் தரும்.

இன்று கண் சம்பந்தமான பிரச்சினைகளும் முதுகு வலியும் ஏற்படலாம்.




உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் தேவை. வேகத்தைத் தவிர்க்க வேண்டும். சிறப்பாக திட்டமிட்டால் நல்ல பலன்களைப் பெறலாம்.

அமைதியாகவும் எதிலும் தலையிடாமல் இருப்பதன் மூலம் உணர்ச்சிவசப்படாமல் இருக்க உதவும். பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் உங்கள் திறமை மூலம் சமாளிக்கலாம். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் தேவைகளை புரிந்துகொண்டு நடந்து கொள்ளுங்கள். உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையை ஏமாற்றாமல் இருக்க முயலுங்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படலாம். நிதி நிலையை கண்காணிப்பதன் மூலம் ஸ்திர நிலையைக் காணலாம்.




நீங்கள் இன்று செய்யும் எந்தச் செயலிலும் நம்பிக்கையும் உறுதியும் தேவை. இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லாத போதிலும் உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மனதில் எதிர்மறை எண்ணம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று அதிகப்படியான பணிகளை சந்திக்க நேரலாம். பணிகளை ஒழுங்குபடுத்தி முன்னுரிமைப்படி செய்தால் குறித்தநேரத்தில் முடிக்க இயலும். இதனால் பணியில் மனநிறைவைப் பெறலாம்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையில் இடைவெளி அனுமதிக்காதீர்கள். இன்று நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படலாம். இந்தப் போக்கை தவிர்ப்பது நல்லது. உங்கள் துணையுடன் நட்போடு நடந்துகொள்ளுங்கள்.




உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள். இதனால் வெற்றி பெற்ற மனிதராக ஆவீர்கள்.

இன்றைய வெற்றியின் ரகசியம் சிறந்த திட்டமிடல் ஆகும். அட்டவணையிட்டு பணி செய்தால் பணிகளை சுமூகமாக செய்ய இயலும்.

உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் உறவை நல்லுறவாக்க இது மிகவும் அவசியம்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியமாய் இருக்க உடற்பயிற்சியும் தியானமும் அவசியம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.




முன்கூட்டிய திட்டமிடலும் கவனமும் இன்று மிகவும் அவசியம்.பிரார்த்தனை இன்று நல்ல பலன் தரும்.

இன்று சிறந்த பலன்களைக் காண்பதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். உங்கள் முயற்சியில் நேர்மை தேவை.

உங்கள் துணையைப் புரிந்துகொண்டு அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். அன்பை ஒருவருக்கொருவர் கொடுத்துப் பெறுவதன் மூலம் உறவு சுமூகமாக இருக்கும்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் மகிழ்ச்சியின்மை காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் வேண்டும்.




உங்கள் தைரியம் மற்றும் உறுதி காரணமாய் வெற்றி கிடைக்கும். நீங்கள் செய்யும் செயல்களை நம்பிக்கையுடன் செய்யுங்கள். அமைதியாய் இருக்க இசை கேளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கையாள்வது எப்படி என்று தெரிந்து கொள்ளுங்கள். இது உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அமர்ந்து பேசுங்கள். இருவரும் கலந்து பேசுவதன் மூலம் உறவின் தேவையைப் புரிந்து கொள்ள முடியும்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டியது அவசியம். நிதிநிலையை கண்காணிப்பதன் மூலம் பண இழப்பைத் தடுக்கலாம்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளைத் திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதற்றமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் – மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள். என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்துக்காகச் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.01.2025




இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக குறித்த நேரத்துக்கு முன் முடிப்பீர்கள்.

பணியில் புதிய மைல் கல்லை அடைவீர்கள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் பணியை நீங்கள் கையாளும் விதத்தையும் உங்கள் வேகம் மற்றும் துல்லியத்தையும் உங்கள் மேலதிகாரிகள் பாராட்டு வார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சந்திப்புகளும் இணைந்து செயல்படு வதும் மகிழ்ச்சியை அதிகரிக்கும்.

இன்று உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யம் அள விற்கு பணப்புழக்கம் காணப்படும். உங்கள் சேமிக்கும் திறன் அதிகரிக்கும்.




இன்று அமைதியாகவும் பொறுமை யாகவும் இருக்க வேண்டும். இதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். தேவையற்ற ஏமாற்ற உணர்வுகளை தவிர்த்திடுங்கள்.

பணியில் உங்களின் நிஜமான திறமையை காண்பிப்பீர்கள். பணி-களை கவனமாகக் கையாண்டால் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்ளுங்கள். நச்சரிக்கும் வகையில் எதையும் கூறா தீர்கள். அவருடன் அதிக நேரம் செலவிடுங்கள்.

செலவுகள் அதிகமாக காணப்படும். என்றாலும் இன்று பணத்தை திறமையாக கையாண்டால் இன்றைய நாள் சுமூகமாக இருக்கும்.

இன்று பதற்றமுடன் காணப்படுவீர்கள். இதனால் தலைவலி ஏற்படலாம்.




நீண்ட கால திட்டங்ககளை அமைப் பது அவசியம். இன்று வாழ்வின் சௌகரி யங்களுக்கு பணம் சம்பாதிப்பீர்கள். இன்றைய சம்பவங்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் பணியில் மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணியில் உற்சாகத் தைக் காண்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நீங்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் இருப்பீர் கள். திரைப்படம் காண அல்லது பொழுதுபோக்க என வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

வீட்டில் சுப நிகழ்சிகளுக்காக பணம் செலவு செய் வதில் மகிழ்ச்சி காண்பீர்கள். பணத்தை உரிய முறை யில் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




இன்று கவனமாகவும் சாமார்த்திய மாகவும் செயல்களை செய்ய வேண்டும். சிறு கவனச் சிதறல் காரணமாகக் கூட தவறுகள் நேரலாம்.

உங்கள் பணிகள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெரும் அளவுக்கு இருக் காது. மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்தால் விரைவில் பாராட்டைப் பெற இயலும். உங்கள் பணி களின் தரத்தை எதிர்மறை எண்ணங்கள் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று முக்கியமான விஷயங்களைப் பற்றி உங்கள் துணையிடம் பேசாதீர்கள். சாதாரணமாகப் பேசுங்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண இது மிகவும் அவசியம்.

அதிகரிக்கும் செலவுகளைக் கண்டு கவலை கொள்ளாதீர்கள். பணம் பயனுள்ள வகையில் செல வாகும். எனவே கவலை வேண்டாம்.

# 50 மெட்ரிக் தொன் பேரீச்சம்பழங்களை நன்கொடையாக வழங்கிய சவுதி அரேபியா



எதிர்வரும் ரமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம் பக்தர்களின் நுகர்வுக்காக சவுதி அரேபியா 50 மெட்ரிக் தொன் பேரீச்சம்பழங்களை இம்முறை நன்கொடையாக வழங்கி யுள்ளது.

பேரீச்சம்பழங்கள் நாட்டுக்கு கிடைத் துள்ளதாக தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தெரி வித்துள்ளார்.

அவற்றை பள்ளிவாசல்க ளுக்கு விநியோகிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டார்.

இம்முறை ஹஜ் கடமைக்காக 3,500 இலங்கையர்களுக்கு வாய்ப்பு வழங் கப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கமும் சவுதி அரசாங்க மும் அண்மையில் கையெழுத்திட்ட தாக தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தெரிவித் துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் ஜூன் முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ள யாத்ரீ கர்கள் ஹஜ் கடமையை மேற் கொள்ள முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

அனுமதி வழங்கப்பட்டுள்ள ஹஜ் யாத்ரீகர்களுக்கான சகல வசதிக ளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் கூறியுள்ளார்.